ஆசைக் கனல்

ராஜம் ராமமூர்த்தி

[காலஞ் சென்ற ஸ்ரீமதி ராஜம் ராமமூர்த்தியின் இந்தக் கடைசி நாவலை தமிழ்நாட்டு வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கிறோம்.]

1. அண்ணாவின் ஆஸ்தி

வண்டி கட்ட ஸரா ஆரம்பித்து விட்டது. தங்கத்தின் பேச்சு மட்டும் ஓய்ந்த பாடில்லை. "என்ன, நான் சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கா?" அப்புறம் வந்து "அடடா, அதை மறந்தே போயிட்டேனடி!" என்று மனைவி காலைப் பிடரிக்கோ, எனக்குக் கெட்ட கோபம் வரும். ஆமா, நான் இப்பவே சொல்லிட்டேன். என்னமோ, பேதெல்லாம் பேசிட்டார். இனிமே ரெண்டு நிமிஷ அவர் ஆஸ்தியைப் பார்த்துக் கொண்டாலாக உண்டு. அவர் ஆத்மாவுக்கு சாந்தி அடையும். என்ன நான் சொல்றது?" என்று அவள் ஆற்றப் பதினைந்தாவது தடவையாகத் தன் பிரசங்கத்தைத் தொடர்ந்து கடந்திய போது, வேம்புவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"அடி என் தங்கக் கட்டியே, உனக்குத்தான் எவ்வளவு அக்கறை என் அண்ணாவின் மேலே —இல்லே பின்னே—என் சிந்தியும் வர்ணம் அண்ணாவின் ஆஸ்தி மேலே! ஆனால், இந்தப் பாரம் பரிவெல்லாம் அவர் உயிரோடு இருந்த போது எங்கே தீர்த்த வாத்தலை போயிருந்தீரா தெரியவில்லையே! இப்படி அவர் எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தபோது, வண்டியும் மெதுவாக ஓட ஆரம்பித்தது.

ஆம்ப்ரா. அந்தத் தெருக் கோடியைத் தாண்டி அடுத்த தெருவுக்குத் திரும்பும் சமயம். "அப்பா! அப்பா!" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தார் வேம்பு. அவர் மூத்த மகன்—பன்னிரண்டு வயது சிறுமுடன் தெரிக்க ஓடவந்து கொண்டிருந்தான்.

"இந்தாப்பா, ஏ வண்டிக்காரா! கொஞ்சம் நிறுத்தப்பா வண்டியை!" என்று வேம்பு கத்த, "..ஹே ..ஹே ...ஹேப் ஹே...ர்..." என்று வண்டிக்காரன் கத்த, அதற்கும் மேலே இவர்கள் கத்தினான் சிறு: "அப்பா! ...வந்து, அம்மா சொன்னா, அடகே முறம் இருந்தா பத்து சல்லே எடுத்து பார்க்கா மல் அதிலே கொண்டு